பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

19 07 2025 **SATURDAY** **6.30 PM**

மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் சிறிய மாநிலங்கள் வளர்ச்சி பெற்றால்தான் நாடு முழுமையான வளர்ச்சியை எட்ட முடியும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

2. தமிழகத்திற்கு தேவையான நிதியை மத்திய அரசு வழங்கவில்லை என்று திமுக மற்றும் காங்கிரஸ் கட்சிகள் தவறான தகவலை மக்களிடையே பரப்பி வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

3. அஇஅதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான அனைத்து நலத்திட்டங்களும் மீண்டும் கொண்டுவரப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

4. கோவை மற்றும் நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் மிக கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. பதினாறு வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

--- *இனி விரிவான செய்திகள்* ---

**<<<<<<>>>>>**

நாட்டின் சிறிய மாநிலங்கள் வளர்ச்சி பெற்றால்தான் நாடு முழுமையான வளர்ச்சியை எட்ட முடியும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

உத்தராகண்ட் மாநிலம் ருத்ராபூரில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த முதலீட்டு திருவிழா 2025-ல் நாடு முழுவதிலும் உள்ள தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்கள் இடையே கலந்துரையாடிய அவர், நாட்டில் உள்ள சிறிய மாநிலங்கள் குறிப்பாக வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியில் மத்திய அரசு சிறப்பு கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினார்.

**<<<<<<>>>>>**

தமிழகத்திற்கு தேவையான நிதியை மத்திய அரசு வழங்கவில்லை என்று திமுக மற்றும் காங்கிரஸ் கட்சிகள் தவறான தகவலை மக்களிடையே பரப்பி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குறை கூறியுள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, 11 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமான நிதியை தமிழகத்திற்கு வழங்கியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்த நிதியை பயன்படுத்தி, தமிழகத்தில் ஆளும் திமுக அரசு நிறைவேற்றியுள்ள மக்கள் நலத்திட்டங்கள் என்ன என்பதை தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மக்கள் நலத்திட்டங்களை முறையாக நிறைவேற்றாத மாநில அரசு, மத்திய அரசை குறை சொல்வதை ஏற்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் இம்மாதம் 21-ஆம்தேதி தொடங்கவுள்ள நிலையில், திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு.க.ஸ்டாலின் மற்றும் அவரது கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய அரசுக்கு எதிராக வெறுப்பு அரசியல் பேசி தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாநிலத்தின் ஒவ்வொரு பிரச்சினையிலும், மத்திய அரசிடம் கேட்டுவிட்டோம், செய்யவில்லை என வீண் பழி சொல்லும் திமுக மக்கள் கேட்கும் நியாயமான கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

அஇஅதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் விவசாயிகள், வர்த்தகர்கள் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான அனைத்து நலத்திட்டங்களும் மீண்டும் கொண்டுவரப்படும் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினத்தில் இன்று பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், மாணவர்களுக்கான மடிக்கணினிகள் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் என்றும், தனியார் மருத்துவமனைகளுக்கு இணையாக அரசு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்படும் என்றும் அவர் கூறினார்.

பேரிடர் காலங்களில் பயிர்கள் பாதிக்கப்பட்டு வருவாய் இழப்பு ஏற்படும் விவசாயிகளுக்கு கூடுதலான தொகை வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விவசாயிகள், வர்த்தகர்கள், பொறியாளர்கள், கட்டுமானத் தொழிலாளர்கள் என பல்வேறு தரப்பினருக்குமான நலத்திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு தொழில் வளர்ச்சிக்கும், நாடு சுயசார்ப்பு நிலையை எட்டுவதற்குமான திட்டங்களை சிறப்பாக நிறைவேற்றி வருவதாக பிஜேபி தேசிய பொதுக்குழு உறுப்பினர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

நாமக்கல்லில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், வேளாண்மை மற்றும் தொழில்துறையில் நாடு சுயசார்பு நிலையை எட்டுவதற்கான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தமிழகத்தின் வளர்ச்சிக்கான பல்வேறு திட்டங்களையும் மத்திய அரசு நிறைவேற்றி வருவதாக அவர் கூறினார்.

மாநிலத்தில் தனியார் பங்களிப்புடன் 100 பள்ளிகளை தொடங்குவதற்கான அறிவிப்பு நடப்பாண்டு மத்திய பட்ஜெட்டில் வெளியிடப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாமக்கல், கரூர் மாவட்டங்களில் உடான் திட்டத்தின்கீழ் விமான நிலையம் அமைப்பதற்கு நிலவியல் அடிப்படையில் உகந்த சூழ்நிலை நிலவுவதாக திரு அண்ணாமலை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

கோவை மற்றும் நீலகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று தெரிவித்தார்.

***Sound Byte – செந்தாமரை கண்ணன் - (1) 40 Sec.)***

அடுத்த நான்கு நாட்களுக்கு தென்தமிழக கடலோரப்பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய குமரிக்கடல் பகுதிகளில் சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று திரு செந்தாமரை கண்ணன் கூறினார்.

***Sound Byte – செந்தாமரை கண்ணன் - (2) 25 Sec.)***

இந்நிலையில், கன்னியாகுமரி கடலில் பலத்த காற்று வீசி வருவதன் காரணமாக சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல மூன்றாவது நாளாக தடை நீட்டிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***Voice Byte - ' குமார் - 38 Sec.)***

இதனிடையே, குற்றலா அருவிகளில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***'Voice Byte - செந்தில் - 27 Sec.***

இந்நிலையில், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் பிற்பகல் நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 32 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளதன் காரணமாக, இன்று மாலை ஆறு மணிமுதல் வினாடிக்கு 22 ஆயிரத்து 500 கனஅடியாக நீர்திறப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் அமைக்கப்பட்டுவரும், பரம்பிக்குளம்-ஆழியாறு பாசனத் திட்டத்தை உருவாக்கிய தலைவர்களின் திருவுருவச்சிலை அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர்கள் திரு எ வ வேலு, திரு மு பெ சாமிநாதன் ஆகியோர் இன்று ஆய்வு செய்தனர்.

----------------

தூத்துக்குடி மாவட்டத்தில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை மாநில அமைச்சர் திருமதி கீதா ஜீவன் வழங்கினார்.

----------------

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் அரசு சார்பில் கட்டப்பட்டுவரும் வீடுகளின் கட்டுமானப் பணிகளை ஆட்சியர் திருமதி அருணா ஆய்வு செய்தார்.

----------------

தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் சாரல் திருவிழாவிற்கான முன்னேற்பாடுகள் குறித்து ஆட்சியர் திரு கமல்கிஷோர் ஆய்வு மேற்கொண்டார்.

-------------

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாவில் நடைபெற்ற வேலைவாய்ப்பு முகாமில் தேர்வான 625 பேருக்கு பணிநியமன ஆணைகளை ஆட்சியர் திருமதி சந்திரகலா வழங்கினார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

16 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய வாலிபால் சாம்பியன் போட்டியில் இந்தியா வெண்கலப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற புள்ளிக்கணக்கில் ஜப்பானை வென்றது.

-----------

அமெரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Dhakshineswar Suresh** – அமெரிக்காவின் **Nicolas Kotzen** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

------------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான 2-வது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டி லண்டனில் தொடங்குவது மழை காரணமாக தாமதமாகியுள்ளது.

<<<<<<END>>>>>